4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 31/2012 நாள்: 15.09.2025 பி.வா.சா.3 – சோமசுந்தரம்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -

நான் குடியிருக்கும் முகவரி எந்த தாலுகாவில் வருகிறது என்று சொன்னால் காங்கேயம் தாலுகாவிற்கு உட்பட்டது. நான் மேற்படி முகவரியில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். நான் இந்த வழக்கில் எனக்கு 20 ஏக்கர் நிலம் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன தொழில் செய்துவருகிறேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சாட்சி விவசாயம் செய்துவருவதாக சொல்லியுள்ளேன் என்று கூறுகிறார். என்னிடம் 4வது பிரதிவாதி அழைப்பாணை மட்டும் தான் கொடுத்தார், வேறு ஆவணங்கள் எதையும் என்னிடம் காட்டவில்லை. நான் கவுண்டர் சமூகத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். வாதிகள் நாடார் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். லட்சுமியம்மாள் குடும்பத்தோடு எனக்கு சுமார் 20 ஆண்டுகளாக பழக்கம். 2009 ம் ஆண்டு உயில் ஆவணம் எழுதுவதற்கு முன்பாக பஸ் கம்பெனி சம்பந்தமாக ஒரு ஆவணத்தில் நான் லட்சுமியம்மாள் குடும்பத்தாருக்காக சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். நான் நாட்குறிப்பு எதுவும் பராமரித்து வருவதில்லை. நான் ஞாபகத்தின் அடிப்படையிலும், ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விவரத்தின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் ஆவணங்களில் சாட்சி கையொப்பம் போட்ட விவரத்தை மட்டும் தான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். யார் மூலமாக லட்சுமியம்மாள் குடும்பம் எனக்கு பழக்கம் என்ற விவரத்தை என் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2005 ம் ஆண்டு

ஏற்படுத்திய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் 2009 ம் ஆண்டு லட்சுமியம்மாள் எந்த ஊரில் எந்த வீட்டில் குடியிருந்தார் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். லட்சுமியம்மாள் குடும்ப வியாபாரம் சம்பந்தமாக எனக்கு வரவு செலவு கிடையாது என்றால் சரிதான், ஆனால் எங்களுக்குள் மற்ற வரவு செலவு உண்டு. லட்சுமியம்மாள் குடும்பத்தோடு வரவு செலவு இருந்த விவரத்தை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், அவ்வாறு சொல்லவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. லட்சுமியம்மாள் உடன் மட்டும் தான் வரவு செலவு இருந்தது, அவரது பிள்ளைகளோடு எனக்கு வரவு செலவு இல்லை, லட்சுமியம்மாளோடு இருந்த வரவு செலவு சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. லட்சுமியம்மாளின் ஆண், பெண் வாரிசுகள் பற்றிய விவரம் எனக்கு தெரியும். மேற்படி நபர்கள் எந்த ஊரில் குடியிருக்கிறார்கள், என்ன தொழில் செய்கிறார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியும். லட்சுமியம்மாளின் ஆண் வாரிசுகள் இருக்கின்ற வீடான உடுமலைபேட்டை மற்றும் காங்கேயத்திற்கு சென்றுள்ளேன். லட்சுமியம்மாளுக்கு எப்போது கர்ப்பபை அறுவை சிகிச்சை நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. என்ன வியாதியால் கர்ப்பபை அறுவை சிகிச்சை நடந்தது என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். புற்றுநோயின் காரணமாக இரண்டு அறுவை சிகிச்சைகள் நடந்ததாக என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2வது பிரதிவாதி ஆனந்தமுருகன் எனது நெருங்கிய நண்பர் என்று சொன்னால் சரியல்ல, எனக்கு அவருடைய தாயார் லட்சுமியம்மாள் தான் பழக்கம். 2009 ம் ஆண்டு பி.சா.ஆ.31 உயில் ஆவணத்தில் நான் முதன் முதலாக சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். மேற்படி உயில் ஆவணம் எழுதும் சமயத்தில் லட்சுமியம்மாள் உடுமலைபேட்டையிலும், காங்கேயத்திலும் நிரந்தரமாக வசித்து வந்தார். மேற்படி பி.சா.ஆ.31 உயில் ஆவணத்தில் லட்சுமியம்மாள் உடுமலைபேட்டையில் வசிப்பதாக தான்

தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.31 ல் உள்ள உயில் ஆவணத்தில் லட்சுமியம்மாள் 50 சதவீத பங்குதாரராக உள்ள பஸ் நிறுவனம் பற்றி தெரிவித்துள்ளார். மேற்படி உயில் ஆவணம் எழுதுவதற்கு 4 நாட்கள் முன்னதாகவே உயில் ஆவணம் எழுதப்போவதாக என்னிடம் லட்சுமியம்மாள் தெரிவித்து, என்னை சாட்சி கையொப்பம் போட அழைத்தார். மேற்படி உயில் ஆவணம் எங்கே பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி காங்கேயம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறுகிறார். அப்போது மேற்படி லட்சுமியம்மாள் குடியிருந்தது உடுமலைபேட்டை என்றால் சரிதான். மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு லட்சுமியம்மாள் ஆட்டோவில் தனியாக தான் வந்தார், உடன் யாரும் வரவில்லை, உறவினரோ, வேறு யாரும் வரவில்லை. வழக்கறிஞர் யாரிடமும் ஆலோசனை கேட்டதாக லட்சுமியம்மாள் என்னிடம் சொல்லவில்லை. நானும் லட்சுமியம்மாளிடம் வழக்கறிஞர் ஆலோசனை பெறுங்கள் என்று அறிவுரை எதுவும் கூறவில்லை. லட்சுமியம்மாளுக்கு யார் உயில் எழுதுவதற்கு யார் ஆலோசனை சொன்னார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சாட்சி யாரும் ஆலோசனை சொல்லவில்லை, அவராக தான் உயில் ஆவணம் எழுதினார். உயில் ஆவணம் முத்திரை தாளில் எழுத வேண்டிய அவசியமில்லை, சாதாரண தாளில் எழுதலாம் என்ற விவரம் எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தில் உள்ள முத்திரை தாளை வாங்குவதற்கு நான் லட்சுமியம்மாளுக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. முத்திரை தாள் எந்த தேதியில் எங்கு லட்சுமியம்மாள் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு நான் வந்த பிறகு தான் லட்சுமியம்மாள் பஸ் கம்பெனி சம்பந்தமாக பேரக்குழந்தைகள் பெயருக்கு எழுத வேண்டும் என்று சொன்ன விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பத்திர எழுத்தரும் பஸ் கம்பெனி சம்பந்தப்பட்ட சொத்து என்பதால் ஒரு வழக்கறிஞரிடம் ஆலோசனை பெற்று வாருங்கள் என்று லட்சுமியம்மாளுக்கு அறிவுரை சொல்லவும் இல்லை. நான் என்னுடைய முதல் விசாரணையில்

லட்சுமியம்மாள் பத்திர எழுத்தரிடம் விவரங்கள் சொன்னார் என்று தான் சொல்லியுள்ளேன், ஆவணங்கள் எதுவும் பத்திர எழுத்தரிடம் கொடுத்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மாதிரி உயில் ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு லட்சுமியம்மாள் ஏற்கனவே எழுதியுள்ள உயில் ஆவணத்தை ரத்து செய்வதாக எழுத வேண்டும் என்று பத்திர எழுத்தரிடம் சொன்ன பிறகு மீண்டும் மாதிரி உயில் ஆவணம் எழுதவில்லை, முதல் மாதிரி உயில் ஆவணத்திலேயே அதை சேர்த்துக்கொண்டார்கள். முத்திரை தாளை ஏற்கனவே லட்சுமியம்மாள் வாங்கி வைத்திருந்தார் என்றும், அதை எடுத்துக்கொடுத்து பத்திர எழுத்தரிடம் அதில் தட்டச்சு செய்து வருமாறு சொன்னார் என்ற விவரத்தை முதல் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே லட்சுமியம்மாள் எழுதியதாக சொல்லப்படும் உயில் ஆவணத்தை லட்சுமியம்மாள் நான் சாட்சி கையொப்பம் போட்டதாக சொல்லப்படும் உயில் ஆவணத்தை எழுதும் போது பத்திர அலுவலகத்திற்கு கொண்டு வந்திருந்தார். 2005 ம் ஆண்டு எழுதிய உயில் ஆவணம் பி.சா.ஆ.31 உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 2005 ம் ஆண்டு எழுதியதாக சொல்லப்படும் உயில் ஆவணம் உடுமலைபேட்டையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பத்திர எழுத்தரும் ஏற்கனவே உள்ள உயில் ஆவணம் உடுமலைபேட்டையில் தான் பதிவு செய்துள்ளீர்கள், இந்த உயில் ஆவணத்தையும் உடுமலைபேட்டையில் தான் பதிவு செய்ய வேண்டும் என்று லட்சுமியம்மாளிடம் சொல்லவில்லை. மேற்படி உயில் ஆவணத்தை பற்றி லட்சுமியம்மாளின் ஆண் மக்கள் மற்றும் பெண் மக்களிடம் தெரிவிக்க வேண்டாம் என்று என்னிடம் சொன்னார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். மேற்படி உயில் ஆவணத்தை டெபாசிட் ஆவணமாக மாற்றி விடலாம் என்று நானோ, பத்திர எழுத்தரோ லட்சுமியம்மாளுக்கு அறிவுரை எதுவும் கூறவில்லை. பி.சா.ஆ.31 உயில் ஆவணத்தின் அசலை சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து யார்

வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி பி.சா.ஆ.31 உயில் ஆவணத்தை நான் சாட்சி கையொப்பமிட்ட பிறகு தற்போது தான் நீதிமன்றத்தில் முதல் விசாரணை அளிக்கும் போது பார்த்தேன். நான் லட்சுமியம்மாள் இறப்பதற்கு முன்னால் பி.சா.ஆ.31 ஆவணம் பற்றி லட்சுமியம்மாள் குடும்பத்தாரிடம் நான் சொல்லவில்லை, இறந்தபிறகு 3வது நாள் காரியத்தின் போது குடும்பத்தாரிடம் மேற்படி உயில் ஆவணம் பற்றி சொன்னேன். நான் தகவல் கொடுத்த பிறகு தான் அசல் உயில் ஆவணங்களை இரண்டாவது பிரதிவாதி ஆனந்த முருகன் எடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஆவணங்களை நான் ஒரு போதும் ஆனந்த முருகனுக்கு அடையாளம் காட்டவில்லை. பி.சா.ஆ.31 ஆவணத்தில் துரைசாமி என்ற பத்திர எழுத்தர் தயார் செய்ததாக கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். உயில் ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். உயில் ஆவணத்தில் தட்டச்சு செய்தவர் நான் என்று துரைசாமி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். மேற்படி லட்சுமியம்மாள் பி.சா.ஆ.31 ல் உள்ள சொத்தை யாருக்கு பாகம் கொடுக்க வேண்டும், யாருக்கு கொடுக்ககூடாது என்ற விவரத்தை என்னிடம் சொல்லியுள்ளார். எப்போது சொன்னார் என்றால் உயில் ஆவணம் எழுதும் போது சொன்னார். மேற்படி விவரத்தை நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். லட்சுமியம்மாளுடைய வாரிசுகள் பி.சா.ஆ.31 உயில் ஆவணத்தை லட்சுமியம்மாள் எழுதி வைக்கவில்லை என்று சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரும் போது தான் எனக்கு தெரியும். லட்சுமியம்மாளின் குடும்ப உறுப்பினர்களுக்குள் என்ன உறவு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். லட்சுமியம்மாளுக்கு 1985 ம் ஆண்டே மார்பக அறுவை சிகிச்சை செய்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி லட்சுமியம்மாள் தொடர்ந்து புற்றுநோயிக்காக சிகிச்சை பெற்று வருகின்ற விவரம் எனக்கு தெரியும். லட்சுமியம்மாள் புற்றுநோயின் காரணமாக இறந்தார் என்ற விவரம் எனக்கு

தெரியும். லட்சுமியம்மாள் புற்றுநோயின் காரணமாக மருத்துவமனையில் வைத்து காலமானார் என்று சொன்னால் சரியல்ல, அவர் வீட்டில் வைத்து தான் காலமானார். ஆனந்த முருகன் புற்று நோய் காரணமாக லட்சுமியம்மாள் மருத்துவமனையில் காலமானார் என்று நீதிமன்றத்தில் சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியாது. லட்சுமியம்மாளுக்கு புற்றுநோயின் காரணமாக உடல்நிலை தேரவில்லை, தொடர்ந்து கடுமையாக பாதிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.32 உயில் ஆவணம் காங்கேயத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது, அது 2011 ம் ஆண்டு தயார் செய்யப்பட்டது. மேற்படி உயில் ஆவணம் தயார் செய்யும் போது நான் லட்சுமியம்மாளுடன் தான் இருந்தேன். மேற்படி உயில் ஆவணம் தயார் செய்யும் போது லட்சுமியம்மாள் கேன்சர் நோயினார் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் அவரால் கையொப்பம் போட முடியவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.32 உயில் ஆவணம் ஏற்படுத்துவதற்கு இரண்டு நாட்கள் முன்பாக நான் அவர் வீட்டிற்கு சென்ற போது ஒரு உயில் ஆவணம் எழுத வேண்டும் என்றும், செட்டில்மெண்ட் ஆவணம் எழுத வேண்டும் என்றும் என்னிடம் லட்சுமியம்மாள் சொன்னார். நான் மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டது தவிர வேறு எந்த நடவடிக்கையிலும் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.32 உயில் ஆவணமும் முத்திரை தாளில் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணம் எழுதுவதற்கு முன்பாக நானோ, லட்சுமியம்மாளோ வழக்கறிஞரிடம் ஆலோசனை பெறவில்லை, ஆலோசனை பெற வேண்டும் என்றும் நானோ, பத்திர எழுத்தரோ லட்சுமியம்மாளிடம் சொல்லவில்லை. மேற்படி உயில் ஆவணத்தில் உள்ள முத்திரை தாள்கள் உடுமலைபேட்டையில் வாங்கப்பட்டதா என்றால் சாட்சி அது பற்றி தெரியாது என்று கூறுகிறார். மேற்படி உயில் ஆவணம் பற்றியும் யாரிடமும் சொல்லவேண்டாம் என்று லட்சுமியம்மாள் என்னிடம் சொன்னார். மேற்படி உயில் ஆவணம் பற்றியும் லட்சுமியம்மாள் இறந்த பிறகு 3 நாட்கள் கழித்து தான் நான் அவரது குடும்பத்தாரிடம் தகவல்

சொன்னேன். மேற்படி உயில் ஆவணத்தை அவர்கள் குடும்பத்தார்கள் எடுக்கும்போது நான் அங்கு இல்லை, போகவுமில்லை. மேற்படி உயில் ஆவணத்தை லட்சுமியம்மாளின் எந்த வாரிசு எடுத்தார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஆவணங்கள் எழுதப்பட்ட காலகட்டங்களில் லட்சுமியம்மாள் புற்றுநோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டு அவர் எழுதும் மனநிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவது சம்பந்தமாக சாட்சி கையொப்பம் போட்டது மட்டும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, அதிலுள்ள விவரங்களை லட்சுமியம்மாள் தான் சொன்னார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் அவருடைய சின்னமகன் பெயருக்கு எழுதி வைப்பதாக தான் என்னிடம் சொன்னார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும் போது லட்சுமியம்மாள் தன்னுடைய பராமரிப்பிற்கும், மருத்துவசெலவுக்கும் சொத்துக்களை வைத்துக்கொள்ளாமல் அனைத்து சொத்துக்களையும் மற்றவர்களுக்கு எழுதி வைக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை தான் உயிருடன் இருக்கும் வரை தான் அனுபவித்து வரவேண்டும் என்ற விவரத்தையும் செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதும்போது அவரது மகனுக்கு தெரியாது, 2 நாட்களில் நானே கொடுத்துவிடுவேன் என்று லட்சுமியம்மாள் என்னிடம் சொன்னார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிய பிறகு சொல்லியவாறு அவரது மகனிடம் கொடுத்துவிட்டாரா என்று எனக்கு தெரியாது. பி.சா.ஆ.5 ஆன செட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தும் தேதியில் சொத்துக்களை சுவாதீனத்தில் கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சுவாதீனத்தை எப்போது லட்சுமியம்மாள் அவர் மகனிடம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவை முழுமையானவை, அதில் எந்த சங்கதியையும் தவிர்த்து நான்

சாட்சியம் அளிக்கவில்லை. லட்சுமியம்மாள் செட்டில்மெண்ட எழுதி வைக்கும் உடல்நிலையிலும், மனநிலையிலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. லட்சுமியம்மாள் உயிருடன் இருக்கும் வரையில் சிகிச்சையில் தான் இருந்தார்கள், உயில் ஆவணம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கும் நிலையில் இல்லை என்றால் சரியல்ல. ஆனந்தமுருகனும் நான் நெருங்கிய நண்பர்கள் என்பதால் நாங்கள் இருவரும் மேற்படி ஆவணங்களை பொய்யாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி லட்சுமியம்மாள் எல்லா வாரிசுகளுக்கும் ஆதரவாக ஆதரவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் ஆனந்த முருகனின் நெருங்கிய நண்பர் என்பதால் என்னை பயன்படுத்தி மேற்படி ஆவணங்களை உருவாக்கியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கும், லட்சுமியம்மாளின் மற்ற உறவினர்களுக்கும் எந்த காலத்திலும் தொடர்பு இருந்ததே இல்லை என்றால் சரிதான், ஆனால் பழக்கம் உண்டு. அதனால் தான் லட்சுமியம்மாளின் எந்த உறவினர்களுக்கும் தகவல் தெரிவிக்காமல் ரகசியமாக மேற்படி ஆவணங்களை தயார் செய்ய சதி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், ஆனந்த முருகனும் ஒரே அரசியல் கட்சியில் பொறுப்பில் உள்ளோம் என்றால் சரியல்ல. நானும், ஆனந்த முருகனும், திமுக கட்சியில் பொறுப்பில் உள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் உண்மையான ஆவணங்கள் அல்ல, மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணையை 1வது பிரதிவாதி தரப்பு தழுவுகிறார்கள்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.